

கடம்பத்தூரில் அதிமுக திருவள்ளூர் மேற்கு மாவட்டம் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் சார்பில் 125 நாள் வேலை உறுதித் திட்டத்தில் நடைபெறும் குளறுபடிகளை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



சென்னை திருவிகநகர் மண்டலம் 75வது வார்டில் ரூ.3.63 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்திற்கான பணியினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார். இதில் மேயர் ஆர்.பிரியா, மண்டல குழு தலைவர் சரிதா, மாமன்ற உறுப்பினர் ரமணி கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம்மாவட்டம்,குன்றத்தூர்ஊராட்சிஒன்றியத்திற்குஉட்பட்டதண்டலம்ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்டுள்ள ரேஷன் கடையை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு முதல் விற்பனையை துவக்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் முருகேசன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மனோகரன் மனோகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் பச்சிளங்குழந்தை பாதுகாப்பு பெட்டகம் விலையில்லாமல் வழங்கும் திட்டம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்



**சென்னை,பிப்.14**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.மா.சுப்பிரமணியன் (13.02.2026) சென்னை, எழும்பூர் அரசு மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவமனையில், 2025-26 சட்டப்பேரவை மானியக்கோரிக்கை அறிவிப்பின்படி, ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் பச்சிளம் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் திட்டத்தை தொடங்கி வைத்து, தாய்மார்களுக்கு பெட்டகத்தை வழங்கி, தாய் மற்றும் சேய் நலனை மேம்படுத்தும் நோக்கில், பேறுகால மற்றும் குழந்தை கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு யின் தாய்மை செயலியை தொடங்கி வைத்தார். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறையில் ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்று 2 திட்டங்கள் அரசு மருத்துவமனைகளில் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட சிறப்புக்குரிய திட்டங்கள் மூலம் கோடிக்கணக்கான பொதுமக்கள் பயன்பெற்று வருகிறார்கள். அந்தவகையில் இன்று பச்சிளம் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் வழங்கும் திட்டம் புதிதாக தொடங்கப்பட்டிருக்கிறது. பச்சிளம் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் என்பது ஏற்கெனவே நிதிநிலை அறிவிப்பில் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 8 இலட்சம் குழந்தை பிறப்புகள் உருவாகிறது. இதில் 4.5 இலட்சம் குழந்தை பிறப்புகள் அரசு மருத்துவமனைகளில் பிறக்கிறது. அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் 20% இரண்டு கிலோவுக்கும் கீழ் எடை குறைவாக உள்ள குழந்தைகளாக பிறக்கின்றது. இப்போது 52,000 குழந்தைகள் எடை குறைவான நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். இதுபோன்று எடை குறைவாக உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதற்கும், தொடர் கவனிப்பிற்கும் இரும்புச்சத்து சொட்டு மருந்தும், விட்டமின் பி3 மற்றும் மல்டி விட்டமின் சொட்டு மருந்துகள் ஆகியவை அடங்கிய பச்சிளங் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, ரூ.8.07 கோடி மதிப்பீட்டில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

பிறந்த குழந்தை ஒவ்வொரு வாரமும் எந்த அளவில் பராமரிக்கப்பட வேண்டும் என்கின்ற அறிவுறுத்தல் அடங்கிய படங்கள் கொண்டு விளக்கக்கூடிய கையேடு வெளியிடப்பட்டு அது பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டு தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனுடன் இன்று தாய்மை செயலி என்கின்ற புதிய செயலி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்த செயலி தமிழ்நாட்டில் தாய் சேய் நல சேவைகளுக்கு வலுப்படுத்தும் முக்கிய முன்னெடுப்பாகும். டிஜிட்டல் செயல் மூலம் கர்ப்பிணித் தாய்மார்கள் பதிவு செய்யப்படும் தளத்திலிருந்து பேறுகால பரிசோதனைகள், பிரசவம், பிரசவத்திற்கு பிந்தைய பராமரிப்பு மற்றும் குழந்தை வளர்ச்சி தடுப்பூசி கண்காணிப்பு போன்றவைகள் இந்த செயலியின் மூலம் கண்காணிக்கப்படும். அந்தவகையில் தாய்மை செயலியும் இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ள ஒன்றாகும்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பல்வேறு சிறப்பு திட்டங்களினால் மகப்பேறு இறப்பு விகிதமும், குழந்தைகளின் மரண விகிதமும், தொடர்ச்சியாக குறைந்துக் கொண்டு வருகிறது. 2021-22 இல் 1 இலட்சம் குழந்தைகளுக்கு தாய்மார்களின் இறப்பு என்பது 90.5 ஆக இருந்தது, 2022-23இல் 52 ஆக குறைந்தது, 2023-24இல் 45.5 ஆக குறைந்தது, 2024-25இல் 39.5 ஆக குறைந்துள்ளது. இது மிகப் பெரிய அளவிலான சாதனையாகும். அதேபோல் குழந்தை மரண விகிதம் என்பது 1000 குழந்தைகள் பிறப்புக்கு 2021-22இல் குழந்தை இறப்பு என்பது 10.4 அளவில் இருந்தது, 2022-23 இல் 10.2 ஆக குறைந்தது, 2023-24இல் 8.2 என்கின்ற அளவில் குறைந்தது, 2024-25இல் 7.7 ஆக குறைந்திருக்கிறது. எனவே மகப்பேறு இறப்பு விகிதமும், குழந்தை மரண விகிதமும் வெகுவாக குறைவதற்கு பூஜ்ஜியம் நிலையை எட்டுவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அந்தவகையில் குழந்தை இறப்பு விகிதத்தை வெகுவாக குறைக்கும் நடவடிக்கைகள்தான் பச்சிளங் குழந்தை பாதுகாப்பு பெட்டகம் வழங்கும் திட்டம். மகப்பேறு இறப்பு விகிதத்தை வெகுவாக குறைப்பதுதான் தாய்மை செயலி.

ஒட்டு மொத்த மகளிர் சமுதாயமும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். ஆற்றான்மையை பொறுத்துக் கொள்ள முடியாதவர்கள் விமர்சனம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அதுகுறித்து கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. 1.31 கோடி மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அரசிற்கு கிடைத்த தகவல் தேர்தல் நடைபெறும்போது, இடையில் வரும் 3 மாதம் அதாவது தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருக்கும்போது மாதம் ரூ.1,000/- கொடுக்க கூடாது என்று நீதிமன்றத்திற்கு செல்ல இருந்தார்கள். இடையில் அவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை வழங்கிவிட்டு, தேர்தல் காலங்களில் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றால் அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும் என்கின்ற காரணத்தினால் தாய்மை உள்ளத்தோடு முதலமைச்சர் அவர்கள் 3 மாத காலத்திற்கான உரிமைத் தொகை ரூ.3,000/- மற்றும் கோடைக்கால சிறப்பு தொகை ரூ.2,000/- சேர்த்து ரூ.5,000/- வழங்கி இருக்கிறார்கள். அனைவருமே மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் 2.0 ஆட்சி மே மாதத்திற்கு பிறகு தொடரும்போது மாதம் ரூ.2,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒட்டுமொத்த தாய்மார்களும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்றார்.

# சாஸ்திரி நகர் பகுதியில் பெண்ணுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது

**சென்னை பிப் 14-**

சென்னை, பெசன்ட் நகர், எல்லையம்மன் கோவில் தெருவில் 38 வயது பெண் ஒருவர் தனது குடும்பத்தாருடன் வசித்து வருவதாகவும், அதே தெருவில் வசித்து வரும் பிரசாந்த் என்பவர் அடிக்கடி மேற்படி பெண்ணிடம் பாலியல் ரீதியாக பேசி தொல்லை கொடுப்பதால், அப்பெண் பலமுறை கண்டித்துள்ளதாகவும், இந்நிலையில், கடந்த 10.ந் தேதி அன்று இரவு அப்பெண் வீட்டில் தனியாக இருந்த போது, மேற்படி பிரசாந்த் என்பவர் மதுபோதையில் அப்பெண்ணின் வீட்டுக்கு வெளியே நின்று கொண்டு, ஆபாச வார்த்தைகளால் பேசி, பாலியல் தொல்லை கொடுத்து, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், பாதிக்கப்பட்ட பெண், சாஸ்திரி நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.சாஸ்திரி நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி பிரசாந்த், என்பவரை நேற்று முன் தினம் கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி பிரசாந்த் சாஸ்திரி நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே வழிப்பறி, அடிதடி உட்பட சுமார் 9 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி பிரசாந்த் என்பவர் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# கோயம்பேடு பகுதியில் மதுபாட்டில்களை பதுக்கி விற்ற ரவுடி கைது

**சென்னை பிப் 14-**

கோயம்பேடு சரக உதவி கமிஷ்னர் சத்தியன் இன்ஸ்பெக்டர் மகேஸ்வரி தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் நேற்று முன் தினம் கோயம்பேடு, மாதா கோயில் தெரு அருகே கண்காணித்தபோது, அங்கு ஒரு நபர் சட்டவிரோதமாக மது பாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்து கொண்டிருந்தது தெரியவந்ததின்பேரில், வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோதமாக மதுபாட்டில்களை விற்பனை செய்த எதிரி சதிஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து கொண்ட 29 மது பாட்டில்கள் மற்றும் மது பாட்டில்கள் விற்பனை செய்த பணம் ரூ.200 ஐ ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சதிஷ் என்பவர் கோயம்பேடு காவல் சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே திருட்டு, வழிப்பறி என சுமார் 11 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி சதிஷ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# வில்லிவாக்கத்தில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி கைது

**சென்னை பிப் 14-**

வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் கடந்த 2024ம் ஆண்டு தாக்கலான அடிதடி மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவு வழக்கில் எதிரி சரவணன் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், எதிரி சரவணன் நீதிமன்ற பிணையில் வெளியே சென்று சென்னை, எழும்பூர், 13வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு முறையாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால், மேற்கண்ட எதிரி சரவணன் என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 06.ந் தேதி அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.வில்லிவாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, பல்வேறு இடங்களில் தேடி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி சரவணன், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி சரவணன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

# சென்னை மணலியில் அமோனியா வாயுகசிவு: மண்டல கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் கண்டனம்

**திருவொற்றியூர்.பிப்.14**

சென்னை மாநகராட்சி மணலிமண்டலகூட்டம்தலைவர் ஏ.வி.ஆறுமுகம் தலைமையில் உதவிஆணையர் பொறுப்பு தேவேந்திரன் மற்றும் மண்டல அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அதிமுக கவுன்சிலர்கள் டாக்டர் ஆர்.ஜி. ராஜேஷ்சேகர் எம். ஸ்ரீதரன் ஆகியோர் மணலி பகுதியில் தினமும் நடைபெறும் அம்மோனியா வாயு கசிவால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாக தங்களுடைய எதிர்ப்பை பதிவு செய்தனர்.21 வது வட்ட கவுன்சிலர் முல்லை ஆர்.ஜி. ராஜேஷ்சேகர் பேசும் போது நான் கவுன்சிலராக பதவியேற்று ரிப்பன் பில்டிங்கில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் பேசும்போது விஷவாயு குறித்துதான் என் கன்னி பேச்சில் பேசினேன்.

இதுவரை மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் முழுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. இதுகுறித்து பலமுறை எடுத்து கூறியும் அதிகாரிகள் கண்டும் காணாமல் உள்ளனர். என்று குற்றம்சாட்டி பேசினார். அப்பொழுது எழுந்து பேசிய வாரிய உதவி பொறியாளர் சிரஞ்சீவி நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம் இனிமேலும் இதுபோன்று நடவடிக்கைகள் தொடராமல் இருக்க கண்காணிக்கிறோம் என்று கூறினார்.இதே குற்றச்சாட்டை 18 வது வார்டு அதிமுக கவுன்சிலர்எம். ஸ்ரீதரன் பேசும் போதுதன்னுடைய வார்டு மக்களும் இந்த விஷ வாயு கசிவால் பலவிதமான நோய்களுக்கு உட்பட்டு உள்ளனர். இனிமேலும் இதுபோன்று நடந்தால் நான் மக்களை திரட்டி போராடுவேன் என்றார். கூடுதலாக தனது வார்டில் உள்ள 126 சாலைகளில் 50 சாலைகள்தான் பணிகள் நடை பெற்றுள்ளன. மற்ற சாலைகள் அப்படியேதான் உள்ளதுஎன்றார். உடனே தலைவர் ஏ.வி. ஆறுமுகம் இப்போது 20 சாலைகளுக்கு டெண்டர் வைக்கப்பட்டுள்ளது.இந்த பணிகள் முடிந்தவுடன் மற்ற அனைத்து தெருக்களிலும் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப் படும் என்றார்.

# தாய்லாந்து நாட்டில் இருந்து சென்னைக்கு விமானத்தில் கடத்திய 31 அபூர்வ வகை உயிரினங்கள் பறிமுதல்: ஒருவர் கைது

**சென்னை பிப் 14-**

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து, பயணிகள் விமானம் ஒன்று, நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னை வந்தது. விமானத்தில் வந்த பயணிகளை, விமான நிலைய சங்கத்துறை ஏர் இன்டெலிஜெண்ட் அதிகாரிகள் கண்காணித்தனர். குறிப்பாக, சுற்றுலா பயணிகள் விசாவில் தாய்லாந்துக்கு போய்விட்டு, உடனே திரும்பி வரும் பயணிகளை தீவிரமாக கண்காணித்தனர்.அப்போது, சென்னையைச் சேர்ந்த சுமார் 30 வயது இளைஞர், தாய்லாந்து சுற்றுலா பயணியாக சென்று விட்டு, மறுநாளே, தாய்லாந்தில் இருந்து விமானத்தில் திரும்பி வந்தவர் மீது சுங்கத்துறை ஏர் இன்டெலிஜெண்ட் அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அந்த பயணியை நிறுத்தி விசாரித்தனர்.

அப்போது அவர் முன்னுக்குப் பின் முரணாக பேசினார். இதையடுத்து, அதிகாரிகள் அந்த தனி அறைக்கு அழைத்துச் சென்று உடமைகளை சோதனை செய்தனர். அப்போது சூட்கேசின் உள்ளே அபூர்வ வகை வன உயிரினங்கள் இருந்ததை கண்டுபிடித்தனர்.அதில், ஆப்பிரிக்க கண்டம் மற்றும் சகாரா பாலைவனம் பகுதிகளில் மட்டும் காணப்படும் அழிந்து வரும் அபூர்வ வகை சல்கட்டா ஆமைகள் 9, ஊர்வன வகையைச் சேர்ந்த தென் அமெரிக்கா மற்றும் கரிபிய தீவுகளில் காணப்படும் அபூர்வ வகை பல்லிகள் 4, ஈஸ்டன் வாட்டர் டிராகன் எனப்படும் கிழக்கு ஆஸ்திரிலேயா பகுதியில் வசிக்கக்கூடிய அபூர்வ வகை உயிரினம் 1, ராயல் பைத்தான் என்று அழைக்கப்படும் பந்து போல் சுருளக்கூடிய ஆப்பிரிக்காவை பூர்வீகமாகக் கொண்ட விஷமற்ற மலைப்பாம்புகள் 12, ஆப்பிரிக்க வனப்பகுதியில் வசிக்கக்கூடிய அல்பைனோ கார்ன் கருப்பு நிற சிவப்பு கண்கள் உடைய விஷமற்ற பாம்பு 1, நீல நாக்கு உடைய ஆஸ்திரேலியா இனமான பல்லி போன்ற உடும்பு வகைகளைச் சேர்ந்த அபூர்வ விலங்குகள் 3, கொடிய விஷம் வாய்ந்த நாகப் பாம்புகளை பிடித்து, உணவாக உட்கொள்ளும் வெள்ளை நிற அரசை பாம்பு எனப்படும் ஒயிட்சைட் கிங் ஸ்னேக் 1 இருந்தது.இது இந்தியாவில் தமிழ்நாட்டில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் நீலகிரி மாவட்டம் ஆகிய இடங்களில் அபூர்வமாக, காணப்பட்டாலும், ஆப்பிரிக்கா வட அமெரிக்கா போன்ற பகுதிகளிலும் ஒன்றிரண்டு மட்டும் வசிக்கின்றன. இதனால் இது அழிந்து வரும் அபூர்வ வகை பாம்பு ஆகும். இதில், மொத்தம் 31 வகையான அபூர்வ வகை உயிரினங்கள் இருந்தன.இவைகள் அனைத்தும் உயிருடன், ஊர்ந்து கொண்டு இருந்ததால், அதிகாரிகள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். அதோடு அந்த சூட்கேசில், உயிரினங்கள் சுவாசிக்க காற்று செல்லக்கூடிய விதத்தில், சிறிய சிறிய துவாரங்களும் போடப்பட்டிருந்தன. இதையடுத்து, அபூர்க வகை உயிரினங்களை கடத்திய நபரை கைது செய்தனர். இதுதொடர்பாக விசாரித்ததில், முறையான மருத்துவ பரிசோதனை, சர்வதேச வன விலங்குகள் பாதுகாப்பு துறை அனுமதியின்றி சட்ட விரோதமாக கடத்தப்பட்டது தெரிய வந்தது.

# வெளிநாடுகளுக்கு கடத்த முயன்ற தொன்மையான சிலைகள் மீட்பு: 4 பேர் கைது

**சென்னை பிப் 14-**

சிலை திருட்டு தடுப்பு பிரிவு உயர் அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில், திருச்சி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலமுருகன் தலைமையில் தஞ்சாவூர் சரக உதவி ஆய்வாளர் தண்டாயுதபாணி தனிப்படையினருடன் கடந்த 6ம் தேதி சென்னை-தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள வலையபேட்டை காலி திடல் அருகில் வாகன தணிக்கையின்போது, சாலை ஓரத்தில் கார் நின்றிருந்ததை கண்டனர். அதை சோதனை செய்த போது, சாக்குபையில் 2 சிலைகள் இருப்பது தெரிந்தது. தொன்மையான மற்றும் அரிதான சுதர்சனர் என்கிற விஷ்ணு சிலை 77.300 கிலோ எடை, 90 செ.மீ உயரம் மற்றும் 48 செ.மீ அகலமும் முன் கைகளில் இரண்டு விரல்களும் தலையில் தீ ஜீவாலையில் ஒரு பகுதி பின்னப்பட்டும் இருந்தது.

பெண் தெய்வம் தேவி 35.450 கிலோ எடையும், 73 செ.மீ உயரமும் 31 செ.மீ அகலமும் இருந்தது.இதையடுத்து, அந்த காரின் ஓட்டுநர் மற்றும் மற்றொரு நபரான மணிகண்டன் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோரிடம் விசாரித்த போது, இந்த 2 சிலைகளும் திருடப்பட்டவை என்பதும், அவற்றை வெளிநாடுகளுக்கு கடத்தி பெருந்தொகைக்கு விற்க முயன்றதும் தெரியவந்தது. அவர்களை கைது செய்தனர். அவர்கள் கொடுத்த தகவலறின் பேரில், முகிலன் மற்றும் ஜான்சன் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். விசாரணையில் இந்த சிலைகள் 14-15ம் நூற்றாண்டை சேர்ந்த விஜயநகர பேரரசின் காலத்தை சேர்ந்தது, என தெரிந்தது. வழக்கின் புலன் விசாரணை நடந்து வருகிறது.

# வானகரம் பகுதியில் மாணவர் மண்டை உடைப்பு: இருவர் கைது

**சென்னை பிப் 14-**

சென்னை, வானகரம், ஷேக்மானியம், பிள்ளையார் கோயில் தெருவில் வசித்து வரும் அஸ்வின், என்பவர் டிப்ளமோ 2ம் ஆண்டு படித்து வருவதாகவும், இவர் கடந்த 11.ந் தேதி அன்று மாலை வீட்டினருகே தர்மராஜா கோயில் அருகே நடந்து சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்றிருந்த இவரது தம்பிக்கு தெரிந்த 4 பேர் அஸ்வினை வழிமறித்து, தனியாக அழைத்துச் சென்று தனது தோழியிடம் எப்படி நீ பேசலாம் என கேட்டு கையாலும், கட்டையாலும் தாக்கிவிட்டு கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், பின்னர் அஸ்வினை தாக்கியதை செல்போனில் வீடியோ எடுத்து, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட அஸ்வினின் தாயார் நாகலட்சுமி என்பவர் வானகரம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

வானகரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் பொன்விக்னேஷ் (எ) விஷால், 2.ஏழுமலை (எ) ராகுல், ஆகியோரை கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 16 வயது மற்றும் 17 வயதுடைய 2 இளஞ்சிறார்களிடம் விசாரணை செய்தனர். இவர்களிடமிருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.இளஞ்சிறார்கள் இருவரும் சிறார் நீதிக்குழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# திருட்டு வழக்கில் 10 ஆண்டு தலைமறைவாக இருந்தவர் கைது

**சென்னை பிப் 14-**

பட்டினம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் தாக்கலான கார் திருட்டு வழக்கில் எதிரி சதிஷ் என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டு, 2015ம் ஆண்டு நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்த நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற எதிரி சதீஷ், 2016ம் ஆண்டு முதல் சைதாப்பேட்டை, 23வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு முறையாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்தார்

, எதிரி சதீஷை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 09.04.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, பல்வேறு இடங்களில் தேடி சுமார் 10 வருடங்கள் தலைமறைவாக இருந்த நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி சதீஷ், என்பவரை கைது செய்தனர்.

### ராணிப்பேட்டை நகராட்சியில்

# ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 6 திட்டப் பணிகள்: கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி திறந்து வைத்தார்



**ராணிப்பேட்டை பிப் 14-**

கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி (13.2.2026) இராணிப்பேட்டை நகராட்சி, பிஞ்சி ஜெயராம் நகர், வார்டு 11 ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தையும், வார்டு 10 ல் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தையும், வார்டு 16 ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.19.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தையும், வார்டு 2, எல் எப் சாலை அவுசிங்போர்டு அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.11 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற் கூடத்தையும், காரை வார்டு 18 ல் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தையும், வார்டு 21 ல் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள பொது கழிவறை கட்டடத்தையும் என 4 நியாய விலைக்கடைகள், 1 பயணியற் நிழற்கூடம், 1 பொது கழிவறை என மொத்தமாக 6 முடிவுற்ற பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் செ.தனலிங்கம், கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் பிரபாகரன், நகரமன்ற தலைவர் சுஜாதா, துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, நகராட்சி பொறியாளர் பரமுராசு, மாவட்ட வழங்கல் அலுவலர் ஏகாம்பரம், வட்டாட்சியர் ஆனந்தன் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# செங்கம் பைபாஸ் சாலை திட்ட பணிகள்: அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்



**செங்கம் பிப் 14-**

செங்கம் தொகுதியில் பைபாஸ் சாலை அமைக்க வேண்டும் என மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, எம்எல்ஏ மு.பெகிரி சட்டசபையில் கோரிக்கை வைத்திருந்தார்.

அதன் பேரில், நெடுஞ்சாலைத் துறை மூலமாக கோலந்தாங்கல் முதல் மண்மலை வரை 43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பைபாஸ் சாலை, 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தண்டராம்பட்டில் பைபாஸ் சாலை, கீழ்சிறுபாக்கம் மேல்சிறு பாக்கம் இடையே 11 கோடி ரூபாய் மதிப்பில் பைபாஸ் சாலை ஆகியவற்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா மண்மலை கிராமத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருவண்ணாமலை மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் தலைமை தாங்கினார். தமிழக துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி முன்னிலை வகித்தார். செங்கம் எம்எல்ஏ மு.பெ.கிரி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக தமிழக பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு பைபாஸ் சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி பேசினார்.

முன்னதாக, செங்கம் தோக்கவாடி பகுதியில் செய்யாற்றின் குறுக்கே 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மேம்பாலத்தை அமைச்சர் எ.வ.வேலு திறந்துவைத்தார். நிகழ்ச்சியில் திருவண்ணாமலை எம்பி அண்ணாதுரை, நெடுஞ்சாலைத் துறை தலைமை பொறியாளர் சத்தியபிரகாஷ், கண்காணிப்பு பொறியாளர் முரளி, கோட்ட பொறியாளர் ஞானவேல், உதவி கோட்ட பொறியாளர் மனோகரன், உதவி பொறியாளர் பிரித்தி, நகர திமுக செயலாளரும் கோயில்கள் அறங்காவலர்கள் குழு தலைவருமான அன்பழகன், நகரமன்ற தலைவர் சாதிக் பாஷா, திமுக ஒன்றிய செயலாளர்கள் அந்தனூர் மனோகரன், கோளாப்பாடி செந்தில், பிஞ்சூர் ஏழுமலை, முன்னாள் தாலுக்கா கூட்டுறவு சங்க தலைவர் சென்னம்மாள் முருகன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## ஆற்காட்டில் திமுக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்

**ராணிப்பேட்டை, பிப், 14-**

திமுக கூட்டணிகட்சியின் சார்பில் மத்திய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் ஆற்காடு பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நகர செயலாளர் ஏ.வி.சரவணன் தலைமை வகித்தார். மாவட்ட அவை தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி,பொருளாளர் ஏ.வி.சாரதி, காங்கிரஸ் மாநில பொறுப்பாளர் அசேன்ஷெரிப், நகர தலைவர் பியாரேஜான், வி.சி.க.மாவட்ட செயலாளர் பாபுவளவன்,தொகுதி செயலாளர் சின்னையன்,மதிமுக நகர செயலாளர் சு.பிரகாசம்,மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்ட பொறுப்பாளர் டி.சந்திரன்,ஆற்காடு நகரமன்ற தலைவர் தேவி பென்ஸ்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யாத பாஜக அரசை கண்டித்து கோஷம் எழுப்பினர்கள் இதில் எஸ்.டி.பி.ஐ.கட்சியின் மாவட்ட தலைவர் பாரூக் மற்றும் திமுக கூட்டணி கட்சியினர் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஆற்காடு கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முப்பதுவெட்டி செய்யாறு சாலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு திமுக ஒன்றிய செயலாளர் எம்.வி. பாண்டுரங்கன் தலைமை வகித்தார்.

இதில் மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் காந்திமதிபாண்டுரங்கன், ஒன்றியநிர்வாகிகள் பண்டாரிநாதன்,மணி,ரோஜா, அன்பு, கஜபதி,அஜித் காங்கிரஸ் நிர்வாகிகள் வீரப்பா,நந்தகுமார் ,கேசவன், பன்னீர்செல்வம், வி.சி.க.மேச்சேரி சிவா, சேது, சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## அம்மாபேட்டை தேர்விலை பேரூராட்சி
### தஞ்சாவூர் மாவட்டம்

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)**
**கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2025–2026**

ந.க.எண். 39 /2026/அ1 நாள்: 11.02.2026

புத்தூர் முதல் குறுக்கு தெரு, புத்தூர் இரண்டாம் குறுக்கு தெரு, புத்தூர் நடுத்தெரு சந்து, புத்தூர் குறிச்சாகொள்ளை சந்து, காசியாப்பிள்ளை காலணி முதல் குறுக்கு தெரு மற்றும் காசியாப்பிள்ளை காலணி இரண்டாம் குறுக்கு தெரு மண்சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக அமைத்தல் பணி.

| மதிப்பீடு ரூ. | முன் வைப்பு தொகை | கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| ரூ. 58.00 இலட்சம் | ரூ. 58,000/– | 25.02.2026 மாலை 4.00 மணி |

மேலும் விவரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.

**கு.குகன்,** செயல் அலுவலர் / ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அலுவலர்,
அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.

செ.ம.தொ.இ / 1067 / ஒப்பந்தப்புள்ளி / 2026

## அம்மாபேட்டை தேர்விலை பேரூராட்சி
### தஞ்சாவூர் மாவட்டம்

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)**
**கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2025–2026**

ந.க.எண். 39 /2026/அ1 நாள்: 11.02.2026

நாடான் தெரு, முடுக்கு தெரு, ஜோசியர் குடியிருப்பு, ரயிலடி ரோடு, விக்ரமன் வாய்க்கால் ரயிலடி தெரு குறுக்கு சாலை, ஜோசியர் குடியிருப்பு மற்றும் ரயிலடி ரோடு தெரு, சிமெண்ட் சாலைகள் பேவர் ப்ளாக் சாலைகளாக அமைத்தல் பணி.

| மதிப்பீடு ரூ. | முன் வைப்பு தொகை | கடைசி நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| ரூ. 153.00 இலட்சம் | ரூ. 153,000/– | 25.02.2026 மாலை 4.00 மணி |

மேலும் விவரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதளத்தை பார்க்கவும்.

**கு.குகன்,** செயல் அலுவலர் / ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அலுவலர்,
அம்மாபேட்டை தேர்வுநிலை பேரூராட்சி, தஞ்சாவூர் மாவட்டம்.

செ.ம.தொ.இ / 1067 / ஒப்பந்தப்புள்ளி / 2026

# அரக்கோணத்தில் அதிமுக கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



**அரக்கோணம் பிப் 14-**

100 நாள்.வேலைவாய்ப்பு திட்டத்தில் உள்ள குளறுபடிகளை கண்டித்து அதிமுக கூட்டணி கட்சிகளின் ஆர்ப்பாட்டம் அரக்கோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரே நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளரும், அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினருமான சு.ரவி தலைமை தாங்கி வழிநடத்தினார் கூட்டத்தில் கூட்டணி கட்சி சார்ந்த தமாகா மாவட்ட தலைவர் மோகன் காந்தி, பாமக மாவட்ட செயலாளர் சரவணன் பாரதிய ஜனதா கட்சி மாவட்ட தலைவர் ஆனந்தன் புரட்சி பாரதம் கட்சி மாவட்ட செயலாளர் செல்லா அமமுக ஒன்றிய செயலாளர் துளசிராமன் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினார்கள்

அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் சு.ரவி கண்டன உரையாற்றி பேசிய போது.100 நாள் வேலை உறுதியளிப்பு திட்டத்தை மோடி அரசு - 125 நாட்களாக உயர்த்தப்பட்டதை சீர்குலைக்கும் செயலில் ஈடுபட்டு அப்பாவி ஏழை, எளிய மக்களின் நலனை கேள்விக்குறியாக்கும் நிர்வாகத் திறனற்ற பொம்மை முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான விடியா தி.முக. அரசை கண்டிப்பதுடன் 42 ஆயிரம் கோடி ஊழல் செய்த திமுக அரசு நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்காக மத்திய அரசு தரும் நிதியை தொழிலாளர்களுக்கு கூலி வழங்காமல் இரண்டு மாத மாக ஏமாற்றி வருகிறது மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் வேலைவாய்ப்பு அட்டைக்காக ரூபாய் 2000 லஞ்சம் பிடுங்குவதாகவும் குற்றச்சாட்டு உள்ளது என பேசினார். கூட்டத்தில் தாமாக தரப்பில் ரவிச்சந்திரன் உத்தமன் தரணி நெமிலி ரவி தேவேந்திரன் உள்ளிட்டவர்களும் பாமக தரப்பில் ராமசாமி உமா மகேஸ்வரி சத்தியநாராயணன் டாக்டர் பாலாஜி பாரதிய ஜனதா கட்சி தரப்பில் விஜயன் தனசேகரன், புதிய நீதி கட்சி தரப்பில் நகர செயலாளர் சாய், முருகவேல் ராஜவேலு சந்துரு கோபி உள்ளிட்டவர்களும் அதிமுக தரப்பில் டாக்டர் பன்னீர்செல்வம் ஷியாம் குமார், மீனா பிஏ .பாலு, மாவட்ட அம்மா பேரவை பிரகாஷ் ஒன்றிய இலக்கிய அணி செயலாளர் கே ஆர் சீனிவாசன் ஒன்றிய மாணவரணி செயலாளர் சத்யநாராயணன் ஒன்றிய மீனவரணி ஜான் விக்டர் நகர எம் ஜி ஆர் மன்ற செயலாளர் கே பி சரவணன் நகர் அம்மா பேரவை செயலாளர் ஜி கே பாபுஜி எம்பி சோமசுந்தரம் வி எஸ்.ராம்குமார் தக்கோலம் சுதாகர் நெமிலி முருகன் உள்ளிட்ட திரளான மகளீரும் கலந்து கொண்டனர் நகர செயலாளர் பாண்டுரங்கன் நன்றி கூறினார் '

# வேலூர்: மாநகராட்சி கடைகளை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்ற அரசாணையை ரத்து செய்ய வணிகர் சங்கங்கள் கோரிக்கை



**வேலூர் பிப் 14 -**

வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட வணிகர் சங்க பேரமைப்பு சார்பில் மின்தந்தி அனுப்பினர். கடந்த 2025 டிசம்பர் 16ல் தமிழக அரசு வெளியிட்ட அரசாணை எண் 480ல் 9வருடங்களுக்கு பிறகு சந்தை மதிப்புக்கேற்ப வாடகை கட்டணம் நிர்ணயம் செய்வதை 12 ஆண்டுகளாக மாற்றியும், 12ஆண்டுகளுக்கு பிறகு மாநகராட்சி நகராட்சி கடைகளில் வாடகை எடுத்து கடை நடத்தி வரும் வணிகர்கள் அதனை திரும்ப ஒப்படைக்க வேண்டும். அதன் பின்னர் மீண்டும் ஏலம் எடுக்க வேண்டும் மற்றும் கடை எடுத்த உரிமையாளரின் வாரிசு பெயரில் மட்டும் தான் மாற்றம் செய்ய வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்திருந்தது. இதனை திரும்ப பெற வேண்டும். மேலும் வணிகர்கள் நலனை கருத்தில் கொண்டு வாரிசுதாரர்கள் மற்றும் அனுபவதாரர்கள் ஒருமுறை மட்டும் பெயர் மாற்றம் செய்து கொள்ள அரசாணை எண்.92(2007) மீண்டும் அமல்படுத்த வேண்டும் என வலியுறுத்தி தமிழக முதல்வருக்கு மின்தந்தி அனுப்பும் நிகழ்ச்சி வேலூர் தலைமை அஞ்சலகத்தில் வணிகர் சங்க பேரமைப்பின் வேலூர் மாவட்ட (ம) மண்டல தலைவர் இரா.ப.ஞானவேலு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஏவி எம் குமார், இளைஞரணி அமைப்பாளர் அருண்பிரசாத், நகராட்சி கடைகள் வணிகர் சங்க தலைவர் பிச்சாண்டி, வேலூர் சாரதி மாளிகை வணிகர் சங்க தலைவர் சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் சுமார் 600 வணிகர்கள் தமிழக முதல்வருக்கு தனித்தனியாக மின் தந்தி அளித்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4 Ph: 0416-4203997 E-Mail: velloredi@thinaboomi.com RNI. Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
கரூர்.
O.S.No:106/2025 I.A.No:2/2025

S.கிருஷ்ணமூர்த்தி S/o.சுப்ரமணி அய்யனூர் புன்னம் (Po) புகளூர் (TK), கரூர்(DT). ...மனுதாரர்/வாதி

-VS-

ஷோபனாராணி, w/o ரமேஷ் உரிமையாளர் பத்மாவதி பார்மா, செட்டிகுளம் மேடு, 6 வது தெரு, திருவண்ணாமலை, திருவண்ணமலை (TK), (DT). ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்/வாதி மேற்படி அசல் வழக்கு மற்றும் மேற்படி IA: 2 / 2025 தாக்கல் செய்து உள்ளதில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி ஆகிய நீர் ஆஜராக வரும் 05.03.2026 ம் தேதி வாய்தா போடப்பட்டு உள்ளது. எனவே எதிர்மனுதாரர் / பிரதிவாதி ஆகிய நீர் ஆஜராக வரும் 05.03.2026ம் தேதி மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்துகொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்ச உத்திரவு ஏற்படும் என்பதை அறியவும்.

M.CHINNASAMY, B.A.,B.L.,
ADVOCATE, KARUR.

---

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், ராணிப்பேட்டை.
அதிமு அ3/75/2026

பார்த்தீபன், த/பெ.முனுசாமி,
நெ..2/61, தட்டார தெரு,
சக்கரமல்லூர், கிராமம்
ஆற்காடு வட்டம்
ராணிப்பேட்டை மாவட்டம்
-------- மனுதாரர்
----எதிராக-----
வருவாய்கோட்ட அலுவலர்
கோட்டாட்சியர் அலுவலகம்,
ராணிப்பேட்டை
---------------எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தை C.முனுசாமி த /பெ சின்னப்பா பிள்ளை என்பவர் கடந்த 19-09-2011 அன்று மேற்படி ,முகவரியில் இறந்துவிட்டதை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளார் . இதன்மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
ராணிப்பேட்டை

---

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், ராணிப்பேட்டை.
அதிமு அ3/84/2026

தட்சிணாமூர்த்தி
த/பெ சுப்பிரமணி
நெ.4/76 N S C போஸ் தெரு,
அரப்பாக்கம் மதுரா
மேல் மின்னல், கிராமம்
வாலாஜா வட்டம்
ராணிப்பேட்டை மாவட்டம்
-------- மனுதாரர்
----எதிராக-----
வருவாய்கோட்ட அலுவலர்
கோட்டாட்சியர் அலுவலகம்,
ராணிப்பேட்டை
---------------எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தாயார் கண்ணம்மாள் க/பெ சுப்பிரமணி என்பவர் கடந்த 10 -05- 2004 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டதை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளார் . இதன்மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம்.தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
ராணிப்பேட்டை

---

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், ராணிப்பேட்டை.
அதிமு அ3/80/2026

R..மணிவண்ணன்
த/பெ.ரத்தினாச்சாரி
நெ.70 A,, மேட்டுத் தெரு,
சொரையூர், கிராமம்
கலவை ,வட்டம்
ராணிப்பேட்டை மாவட்டம்
-------- மனுதாரர்
----எதிராக-----
வருவாய்கோட்ட அலுவலர்
கோட்டாட்சியர் அலுவலகம்,
ராணிப்பேட்டை
---------------எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தை ரத்தினாச்சாரி த/ பெ முருகாச்சாரி என்பவர் கடந்த 12-06-1969 அன்று மேற்படி ,முகவரியில் இறந்துவிட்டதை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளார் . இதன்மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
ராணிப்பேட்டை

---

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், ராணிப்பேட்டை.
அதிமு அ3/79/2026

R.மணிவண்ணன்
த/பெ.ரத்தினாச்சாரி
நெ.70 A,, மேட்டுத் தெரு,
சொரையூர், கிராமம்
கலவை ,வட்டம்
ராணிப்பேட்டை மாவட்டம்
-------- மனுதாரர்
----எதிராக-----
வருவாய்கோட்ட அலுவலர்
கோட்டாட்சியர் அலுவலகம்,
ராணிப்பேட்டை
---------------எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தாயார் மாணிக்கம்மாள் க /பெ ரத்தினாச்சாரி என்பவர் கடந்த 20-07-1985 அன்று மேற்படி ,முகவரியில் இறந்துவிட்டதை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளார் . இதன்மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம்.தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
ராணிப்பேட்டை

---

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், வேலூர்,
ந.க அ1/401/2026

M..குணசேகரன்
த/பெ,முனுசாமி
நெ.319, காந்திபுரம், புத்தூர்,
காட்பாடி வட்டம்
வேலூர் மாவட்டம்
-------- மனுதாரர்
----எதிராக-----
வருவாய்கோட்ட அலுவலர்
கோட்டாட்சியர் அலுவலகம்,
வேலூர்
---------------எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் பாட்டி முனியம்மாள் க /பெ ராமசாமி, என்பவர் கடந்த 07-09-2012 அன்று புத்தூர் மதுரா, லட்சுமிபுரம்,காட்பாடி வட்டம், வேலூர் மாவட்டம் என்ற முகவரியில் இறந்துவிட்டதை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளார் . இதன்மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் வேலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
வேலூர்

---

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், ராணிப்பேட்டை.
அதிமு அ3/77/2026

வெங்கடேசன்
த/பெ, ரங்கநாதன்
நெ.10/99, பிள்ளையார்கோவில்
தெரு, சிவபுரம் இருங்கூர், கிராமம்
கலவை வட்டம்
ராணிப்பேட்டை மாவட்டம்
-------- மனுதாரர்
----எதிராக-----
வருவாய்கோட்ட அலுவலர்
கோட்டாட்சியர் அலுவலகம்,
ராணிப்பேட்டை
---------------எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தந்தை ரங்கநாதன் த /பெ தொப்பளா கவுண்டர் என்பவர் கடந்த 09-10-1974 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டதை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளார் . இதன்மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
ராணிப்பேட்டை

---

மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், ராணிப்பேட்டை.
அதிமு அ3/76/2026

V.ராஜேஷ், த/பெ வெங்கடேசன்
நெ.10/99, பிள்ளையார்கோவில்
தெரு, சிவபுரம் இருங்கூர், கிராமம்
கலவை வட்டம்
ராணிப்பேட்டை மாவட்டம்
-------- மனுதாரர்
----எதிராக-----
வருவாய்கோட்ட அலுவலர்
கோட்டாட்சியர் அலுவலகம்,
ராணிப்பேட்டை
---------------எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் பாட்டி பெரியகுழந்தை க /பெ முருக கவுண்டர் என்பவர் கடந்த10-11-2011 அன்று மேற்படி முகவரியில் இறந்துவிட்டதை பதிவு செய்யாமல் விடுபட்டதால் அந்த இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவு வழங்ககோரி மனுதாக்கல் செய்துள்ளார் . இதன்மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த விளம்பரம் கண்ட 15 நாட்களுக்குள் ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலம் தங்களது ஆட்சேபனையை தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் மனு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நேர்முக உதவியாளர்
வருவாய் கோட்ட அலுவலர்
ராணிப்பேட்டை

---

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 2/42/2026

முனுசாமி த/பெ கோபால்
No 2/2 | யாதவர் தெரு, மேல் களத்தூர், நெமிலி வட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய்
கோட்டாச்சியர் அவர்கள்,
அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்

மேலேகண்ட முகவரியில் வசிக்கும் முனுசாமி ஆகிய நான் எனது தாத்தா சின்ன பையன் த /பெ முனி இவர் கடந்த 22-07-1949ல் மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, தாத்தாவின் இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சேபனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு
முனுசாமி

---

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 2/43/2026

முனுசாமி த/பெ கோபால்
No 2/2 | யாதவர் தெரு,
மேல் களத்தூர்,
நெமிலி வட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய்
கோட்டாச்சியர் அவர்கள்,
அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்

மேலேகண்ட முகவரியில் வசிக்கும் முனுசாமி ஆகிய நான் எனது பாட்டி சாலி க/பெ சின்ன பையன் இவர் கடந்த 18-4-1972ல் மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, பாட்டியின் இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சேபனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு
முனுசாமி

---

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 2/45/2026

ராஜேந்திரன்
த/பெ நாசிம்ம பிள்ளை
No 2/29 யாதவர் தெரு,
மேல் களத்தூர்,
நெமிலி வட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய்
கோட்டாச்சியர் அவர்கள்,
அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்

மேலேகண்ட முகவரியில் வசிக்கும் ராஜேந்திரன் ஆகிய நான் எனது பாட்டி பார்வதி க/பெ முருகப் பிள்ளை இவர் கடந்த 03-07-1985ல் மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, பாட்டியின் இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சேபனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு
ராஜேந்திரன்

---

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 2/44/2026

ராஜேந்திரன்
த/பெ நாசிம்ம பிள்ளை
No 2/29 யாதவர் தெரு,
மேல் களத்தூர், நெமிலி வட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய்
கோட்டாச்சியர் அவர்கள்,
அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்

மேலேகண்ட முகவரியில் வசிக்கும் ராஜேந்திரன் ஆகிய நான் எனது பாட்டி மதுவாத்தம்மாள் க/பெ பச்சைமுத்து பிள்ளை இவர் கடந்த 13-05-1936ல் மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, பாட்டியின் இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சேபனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு
ராஜேந்திரன்.

---

மாண்புமிகு சார்பு நீதிமன்றம்,
அரக்கோணம்
O.S.No. 90/2015 IN
E.R.No. 119/2019

தம்பா, த-பெ.பாபு, இந்து, வயது 68,
இருப்பிடம் எண்.133
கவுன்சிலர் முருகன் தெரு,
பெரியார் நகர், அரக்கோணம்,
..மனுதாரர்-D.H.
எதிர்
S.பிரபு, த-பெ.சுப்ரமணி, இந்து, வயது 33, இருப்பிடம் எண்.122. கவுன்சிலர் முருகன் தெரு, பெரியார் நகர், அரக்கோணம்,
.........எதிர்மனுதாரர்-J.D.

மேற்படி வழக்கில் மனுதாரர்-D.H. மேற்படி நிறைவேற்று மனு .O.S.No. 90/2015 IN E.R.No. 119/2019 கோர்ட்டார் அவர்கள் 23.03.2026 அன்று வேலூர் மாவட்டம், தற்சமயம் ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தாலூக்கா, அரக்கோணம் டவுன், பெரியார் நகர், கவுன்சிலர் முருகன் தெருவில் வார்டு A, பிளாக்-14, T.S.No.29, மனை எண்.82 மற்றும் அதிலுள்ள வீட்டின் அளவு கிழக்கு மேற்கு 11 % அடி, வடக்கு தெற்கு 55 அடி, இதில் கிழக்கு மேற்கு 11 அடி, வடக்கு தெற்கு 28 அடி ஆக 308 சதுரடியில் உள்ள ஆஸ்பெட்டாஸ் சீட் போட்ட வீடு மற்றும் கட்டுக்கோப்பு சாமான்கள் மற்றும் கதவு வாசக்கால் மின் இணைப்பு எண்.283-022-140 அதன் டிபாசிட் தொகை உட்பட வரி விதிப்பு எண். 11649. உள்ள மனுச்சொத்தை மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் ஏலத்தில் விட உத்திரவு போடப்பட்டுள்ளது. ஏலத்தில் சொத்தை எடுக்க விருப்பம் உள்ள நபர்கள் வந்து ஏலத்தில் கலந்து கொள்ளுமாறும் மற்றும் அதன் விவரங்களை மாண்புமிகு நீதிமன்றத்தில் அறிந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திரு.க.மொ.ஜமாலுதீன்,பி.ஏ.,பி.எல்.,
மனுதாரர்-D.H. வழக்கறிஞர்.
அரக்கோணம்

---

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 2/53/2026

இங்கர்சால் த/பெ கோதண்டன்
பஜார் கோயில் தெரு, சிறுண
மல்லி நெமிலி, வட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய்
கோட்டாச்சியர் அவர்கள்,
அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்

மேலேகண்ட முகவரியில் வசிக்கும் இங்கர்சால் ஆகிய நான் எனது பெரியம்மா ராஜம்மாள் க/பெ ராஜகோபால் நாயுடு இவர் கடந்த 05-06 - 1993ல் மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, பெரியம்மா இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சேபனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு
இங்கர்சால்

---

மாண்புமிகு கோட்டாட்சியர் அவர்கள் அரக்கோணம்.
அதிமுசி 2/52/2026

வெங்கடேசன்,
த/பெ திருவேங்கடம்
No 8/15 வள்ளார் தெரு,
ஜோதிநகர் அக்கோணம்,
வட்டம்
--மனுதாரர்
திருமிகு. வருவாய்
கோட்டாச்சியர் அவர்கள்,
அரக்கோணம்.
--எதிர்மனுதாரர்

மேலேகண்ட முகவரியில் வசிக்கும் வெங்கடேசன் ஆகிய நான் எனது தாயார் இந்திராணி க/பெ திருவேங்கடம் இவர் கடந்த 04-05-2015ல் மேலே கண்ட முகவரியில் இறந்தார். இவரது இறப்பு எங்கள் கவனக்குறைவால் எதிர் மனுதாரிடம் பதிவு செய்ய தவறி விட்டோம். எனவே, தாயார் இறப்பு பதிவு செய்யும்படி கோரி உள்ளேன். எனவே இது குறித்து ஆட்சேபனை உள்ளவர்கள் நேரில் ஆஜராகி ஆட்சேபனை தெரிவிக்கலாம் தவறினால் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டு உத்தரவு பெறப்படும் என அறியவும்.

இப்படிக்கு
வெங்கடேசன்

